# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 ஆகஸ்ட் 2002 பகுதி : 8

திங்கள் இதழ்

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 ஆகஸ்ட் 2002 பகுதி: 8

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்


1. செந்தமிழ் வளர்த்த சேதுபதி 267

2. சித்தம் அழகியார் 269

*சுப. அண்ணாமலை*

3. திருநாவுக்கரசர் வாழ்க்கையும், குறிக்கோளும் 273

*இரா. சதாசிவம்*

4. திருக்குறளாராய்ச்சி 294

*அரசஞ்சண்முகனார்*

# செந்தமிழ் வளர்த்த சேதுபதி

சென்ற இதழில் மாண்புமிகு மன்னர் பாற்கரசேதுபதி மகாராசா ஆன்மீகம் வளர அருள்முனிவர் விவேகானந்தருக்குப் பெரும் பொருளும் கருத்தும் வழங்கி மேலை நாட்டுச் செலவு மேற்கொள்ளச் செய்த அருஞ்செயலைப் பார்த்தோம். ஈண்டு அவர் தமிழ்வளர்த்த பாங்கினை அறிந்து மகிழ்வோம்.

மாண்புமிகு பாற்கரசேதுபதி மகாராசா அவர்கள் தமிழ்ப்புலவருக்கு ஆயுள் பரியந்தம் பசலிதோறும் வழங்கியபரிசில்:

மாண்புமிகு பாற்கரசேதுபதி மகாராசா அவர்கள் செந்தமிழ் வளர்த்த தமிழறிஞர் இரா.இராகவையங்கார் அவர்களுக்குப் பல்லக்கு முதலிய வரிசைகள் வழங்கினார். பசலிதோறும் ஆயுட்காலபரியந்தம் ரூபாய் 635 சம்மானமாகத் தரவும் உரிமைப்பத்திரம் பதிவுசெய்து தந்துள்ளார்கள். புலவரைப் போற்றும் புரவலர் வழங்கிய சாசனம்.

"நமது சமத்தானத்தில் பிறந்து வளர்ந்து நமது சமத்தானத்து அன்னப் பிரபாவத்தினாலேயே தமிழ்க் கல்வியில் பூரண பாண்டித்தியமுடையராய், ராவ்பகதூர் பி. அரங்கநாதமுலியார் முதலிய பல கல்வியிற் பெரியோர்கள் மிகச்சிறப்பித்து எழுதிய மகாவித்துவானாய் அநேக ஆண்டுகளாக நமது சமத்தானத்துத் தலைமைத் தமிழ் வித்துவானாயுள்ள தாங்கள் தமிழ்நூலுரைகள் முதலியன செய்கின்றதனாலும் தமிழிலுள்ள அரிய பெரிய பொருள்களைப் பலருக்கும் எழுத்துரைத்தலாலும் அனேகர்க்குப்பூர்வீகத்தமிழ் மொழியைப் போதித்து வருதலாலும் கிடைத்தற்கருமையாயுள்ள பழைய தமிழ் நூல்களைத் தேடிச்சேர்த்தலாலும் அவற்றைப் பரிசோதித்தலாலும் வெளியிடுதலாலும் இன்னும்பல நன்முயற்சிகளாலும்

தமிழ்மொழியை நன்றாய் வளர்ப்பவர்களாயும் நமது சமத்தானத்து கற்றோர் அரங்கத்தில் பரமமுக்கியராயும் இருத்தலை ஆலோசித்து திரமானசம்மானமாக இப்பத்திரத்தின் மூலம் நம்மால் கொடுக்கலாயிற்று." - பாற்கரசேதுபதி மகாராசா.

நன்றி: ஆத்திச்சூடி முன்னுரை, தமிழ்ப்பல்கலைக்கழகம்.

குறிப்பு:

மதுரைத்தமிழ்ச் சங்கத்தில் நூற்பதிப்பு, ஆராய்ச்சித் துறைகளின் தலைவராய் இரா. இராகவையங்கார் அவர்கள் விளங்கினார்கள். இவர்காலத்தில் இலக்கிய ஆராய்ச்சியும் சரித்திர ஆராய்ச்சியும் பெரிதும் போற்றி வளர்க்கப்பட்டன. செந்தமிழ் ஆசிரியராக விளங்கினார்கள்.

# சித்தம் அழகியார்

சுப.அண்ணாமலை

இறைவனைக் கண்டு, கூடி மகிழ்ந்தாள் ஒரு மங்கை. அவள் உள்ளம் கவர்ந்து மகிழ்வித்த கள்வனாகிய இறைவன் பிரிந்துவிட்டான். அவனைக் கூடி இன்பம் நுகர்ந்த நினைவால் தன் தோழிமாரிடம் மகிழ்ச்சியைப் புலப்படுத்திக்கொண்ட அவள், இப்பொழுது பிரிவாற்றமையால் வருந்துகின்றாள். அவளுக்கு உணவு செல்லவில்லை; உறக்கம் வரவில்லை. நெடிய இரவாக - கொடிய இரவாக - நீண்டு கொண்டே சென்ற நேரம், ஒருவாறாக வைகறைக்கு இடமளித்து,இருளுக்கு விடைகொடுத்தது. நீராடச் செல்வதற்காக அவளைத் தோழிமார் துயில் எழுப்புகிறார்கள். தூக்கம், மயக்கம்-இவ்விரண்டுள் எதுவென்று தெரியாத நிலையில் கண்மூடிக் கிடந்தவள் விழித்து எழுகிறாள். தோழிமாரின் அழைப்பொலி கேட்கிறது:

"முத்தன்ன வெண்ணகையாய்!"

முத்தைப் போன்ற பல்வரிசை உடையவளே என்று அழைக்கின்றனர். அவளது பல்வரிசையின் வெண்மையை, அவள் முகமலர்ந்து பேசும் போதெல்லாம் கண்டு மகிழ்ந்தவர்கள் ஆதலால், அதனைச் சிறப்பிக்கும் பொருட்டு முத்தை உவமைப்படுத்திப் புகழ்கின்றனர்.

அவளது முகமலர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் காரணம் யாது? அவள் இறைவனைக் கூடி மகிழ்ந்ததே ஆகும். அவனைப் பற்றித் தோழிமாரிடம் அவள்,

"அத்தன், ஆநந்தன், அமுதன் என்று அள்ளூறித்

தித்திக்கப்" பேசுவது வழக்கமாம். இறைவன் தனது காதலை ஏற்று அருள்புரிந்து, தன் தலைவன் ஆயினான் என்ற பொருள்பட, "அத்தன்" என்றும், அவனது இயல்பே ஆநந்தம்; அவன் தன்னை அடைந்தவர்க்கும் அணைந்தவர்க்கும் ஆநந்தம்

அளிப்பவன் என்ற பொருள்பட, 'ஆநந்தன்' என்றும், அவனைக்கூடி மகிழ்ந்தபோது தான் பெற்ற இன்பம், அமுதம் உண்டாற்போல இருந்தது என்ற பொருள்பட, 'அமுதன்' என்றும் இறைவனைக் குறிப்பிட்டாள். இவ்வாறு தன் அனுபவத்தை நினைவு கொண்டு பேசும்போது அவளது வாயில் நீர் ஊறிற்று. அதைச் சொல்வதில் மட்டில்லா இன்பம் கண்டாள்.

இவ்வாறு வாய் இனிக்க அவள் பேசுவதை முன்பு கேட்டிருந்த தோழிமார் தாங்கள் வரும் முன்பே அவள் எழுந்து, தங்களை எதிர்கொண்டு வரவேற்றுப் புன்னகைமலரப் பேசி உபசரிக்கக் கண்டிருந்த தோழிமார் - இப்பொழுது தாங்கள் அவள் வீட்டு வாயிலில் வந்து நின்றும், அவள் எழுந்திராமலும், தம்மை வரவேற்காமலும், வாயினிக்க இறைவனைப் பாடி மகிழாமலும், இன்னும் உறங்கிக் கிடப்பதைக்கண்டு வியந்து நிற்கின்றனர். அவள் வழக்கத்திற்கும் இயல்புக்கும் மாறாக நடப்பது ஏன் என்று வினவும் முகத்தான், அவளை அழைத்துக் கேட்கின்றனர்:

"முத்து அன்ன வெண் நகையாய்!
முன்வந்து, எதிரெழுந்து, என்
அத்தன், ஆநந்தன், அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய்! வந்து உன் கடைதிறவாய்!"

முன்னரே எழாவிட்டாலும், வரவேற்காவிட்டாலும், வாயினிக்கப் பேசாவிட்டாலும், வாயிற் கதவையேனும் திறக்கலாகாதா? என்று கேட்கின்றனர்.

இவர்கள் இவ்வாறு அழைக்கும்போது, உள்ளே படுக்கையில் கிடக்கும் தலைவி, எழுந்து வெளிவந்து, அவர்களை நோக்கி,

"பத்துடையீர், ஈசன் பழவடியீர், பாங்குடையீர்
புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ?

என்று அவர்கள் வினாவிற்கு எதிர்வினாத் தொடுக்கிறாள். இவ்வினாவில், இரவெல்லாம் இறைவனது பிரிவைக் குறித்து, அவள் பலவாறு நினைத்து வருந்தியமை புலப்படுகிறது.

‘முன்பு, தன்னைக் கூடிக் கலந்த இறைவன் இப்பொழுது பிரிந்து பராமுகமாக இருக்கின்றானே! தன் அன்பு குறைந்துவிட்டதோ? புதிதாக அவனுக்கு ஆட்பட்டமையால் புறக்கணிக்கின்றானோ? அவனுக்குத் தொண்டு செய்யும் முறைகளில்தான் இன்னும் பழகவில்லையோ? அதனால் வெறுத்து ஒதுக்கி விட்டானோ?’ - என்று பலவாறாக எண்ணிக்கொண்டு படுக்கையில் கிடந்தவள், தோழிமார் தன்னைப்போல் அல்லாமல், புறப்பட்டு வந்து தன்னை அழைப்பதைக் கேட்டு, “அவர்கள் இறையன்பில் பழுத்தவர்கள்; அதற்குக் காரணம், அவர்கள் முன்பே அவனுக்கு ஆட்பட்டவர்கள்; பழவடியார்; தொண்டு செய்யும் பாங்கினை அறிந்தவர்கள். ஆதலின் இறைவன் அவர்களை உவந்து கூடி மகிழ்விக்கின்றான். புதிய அடியாளாகிய எனக்கு இத்தகுதியெல்லாம் இல்லை. இஃது அந்தத் தோழிமாருக்குத் தெரியாதா? தெரிந்தும், இறைவனைப் புகழ்ந்து பாடாத எனது குறையைச் சுட்டிக்காட்டி, கூசாமல் கேலி பேசுகின்றார்களே“ - என்று எண்ணி மனம் நொந்து போகின்றாள். “என்னைக் குறை நீக்கி ஆட்கொண்டால் உங்களுக்கு என்ன தீமை?“என்று அவர்களிடம் கேட்கின்றாள்.

“பத்துடையீர்! ஈசன் பழஅடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ?“

அவள் நொந்து கூறுவதைக் கேட்ட தோழிமார், தம் சொற்களால் தற்செயலாக நேர்ந்துவிட்ட தவற்றை உணர்கின்றனர். அவளை அமைதிப்படுத்த முந்துகின்றனர்.

“பெண்ணே! ‘புதிய அடியார்’ என்றும் ‘புன்மை’ என்றும் பேசுகிறாயே! உன் அன்பின் ஆழம் எங்கள் எல்லோருக்கும் தெரியாதா? பிறர் அன்பு பொய்வேடம் ஆவதே போல் உன் அன்பு பொய்யல்லவே! உண்மையாயிற்றே! நீ இறைவனைக் கூடி மகிழ்ந்தவள் அல்லவோ? இவ்வாறு பேசுவது தகுமோ? என்ற கருத்தில்,

"எத்தோ நின் அன்புடைமை? எல்லோம் அறியோமோ?"

என்று கூறி, மேலும் கூறுகின்றனர்:

"மங்காய்! சித்தத்தில் சிவனை வைத்துக் கொண்டவள் ஆகிய நீ, அவனைப் புகழ்ந்து பாடவேண்டும், நாங்கள் கேட்டு மகிழ வேண்டும் என்ற ஆசையால்,

"அத்தன் ஆநந்தன் அமுதன் என்றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடை திறவாய்"

என்று கூறினோமே யல்லாது, உன்னைக் கேலி செய்யவில்லை. சித்தம் அழகியார் சிவனைப் போற்றிப் பாடுதல்தானே வழக்கம்? அத்தகையாளாகிய நீ பாடாமல் இருக்கின்றனையே என்று மருண்டு நின்றோமே அன்றி வேறல்ல. 'ஆட்கொண்டால் பொல்லாதோ?' என்று பெரிய வார்த்தை பேசுகிறாய். நீ வருந்தும்படி சொல்லில் தவறுண்டாக இடங்கொடுத்து விட்டோம். ஆதலால் உன்னைத் தாழ்த்திக்கொண்டு, எங்களை உயர்த்துகிறாய். ஒத்த நட்புடைய நமக்கு இடையே இவ்வாறு நேர்ந்து விட்டதே! உன்னை உள்ளம் நோகச்செய்த எங்களுக்கு வேண்டும்! இத்தண்டனை வேண்டும்!" என்று கூறி அவளை அமைதிப்படுத்துகின்றனர். பாடல் வருமாறு:

முத்தன்ன வெண்ணகையாய்! முன்வந் தெதிர் எழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்!
பத்துடையீர்! ஈசன் பழவடியீர்! பாங்குடையீர்,
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ?
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ? நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்!

# திருநாவுக்கரசர் வாழ்க்கையும், குறிக்கோளும்

*இரா. சதாசிவம்*

**முன்னுரை :-**

சைவ சமயத்தில் சமயக்குரவர் எனப்போற்றப்படுபவர் நால்வர். அவருள் ஒருவர் அப்பர் என அழைக்கப்படும் திருநாவுக்கரசர். அவரது வாழ்க்கையும், குறிக்கோளும் குறித்து ஆராய்வது கட்டுரையின் நோக்கம்.

தமிழ்நாட்டில் மக்கள் இல்லறம் பேணும் இயல்பினர். காதல் மரபுகளைப் போற்றும் சங்க இலக்கியங்களைக் கண்டவர்கள். அகத்தே அன்புடையவர்கள். தாம் வாழும் சமூகத்தில் அன்பை வளர்த்துப் பொருளும், இன்பமும் சிறப்பதற்குரிய வாழ்க்கை நெறி இல்லறமாகும். இவ்வாழ்க்கை கலை நிறைந்ததாகும். கலை மக்களை இன்புறுத்தி அறிவை வளர்த்து சமூக ஒழுக்கத்தைப் பேணுவதாகும். தனிமனிதனும், தான் வாழும் குடும்பமும், அக்குடும்பங்கள் சேர்ந்த சமூகமும் ஓர் ஒழுங்குக்கு உட்பட்டு இயங்குகிறது. இந்த இயக்கம் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் பயன்களை உள்ளடக்குகிறது. அறமும், பொருளும் சிறக்கக் கலையும் இன்பமும் பெருகும்; மக்கட் சமுதாயம் மாண்புறும். அறமும், பொருளும் சிதைய சமூகச் சிக்கல்கள் பெருகி, தனிமனித வாழ்க்கையும், குடும்பமும் இனிய வாழ்க்கைப் பேறுகளை இழந்து சிதைந்து போகும். மண்ணில் அறம், பொருள், இன்பம் சிதையும்போது மனிதன் விடுதலை என்னும் வீடுபேறு கனவாய்க் கற்பனையாய்ப் போய்விடும்.

**திருநாவுக்கரசர் தோற்றம் :-**

இத்தகைய சமூகச் சீரழிவில் தமிழ்நாடு சிக்கிய காலம் திருநாவுக்கரசர் வாழ்ந்த காலம். மருள்நீக்கியார் தென்ஆர்க்காடு பகுதியில் திருவாமூர் என்னுமிடத்தில் செல்வக்குடியில் பிறந்தவர். தாய், தந்தையரை இழந்து தவித்தார். பெருநிலக் கிழமையுடைய உழவர்குடியில் பிறந்து மாடு, மனை, செல்வம் அனைத்தையும் இழந்தார். குடும்பச் செல்வத்தைப் பேணுதல்

அறியாத இளமை; பிற்காலத்தில் அவர் உணர்ந்து பார்க்கிறார். இச்செல்வம் சிதைந்ததன் காரணம் செல்வத்தைப் பேணும் அனுபவம் மிக்க தன் தந்தையை இழந்ததுதான் என்பதை, "மனைவாழ்க்கையும், ஒண்பொருளும் ஒருவர் தலைகாவலிலா மையினால்" அழிந்தது எனக் குறிப்பாகச் சுட்டுகிறார்.

## திருநாவுக்கரசர் காலம் :-

திருநாவுக்கரசர் குடும்ப வாழ்க்கை சிதைந்தது. பொருள் சிதைந்த பின்பும் வாழ்க்கைக்குப் பற்றுக்கோடாக ஓர் இடத்தை நாடுகின்றார். அக்காலத்தில் அரசு, சமயச்சங்கம் என்னும் இரண்டு அமைப்புக்கள் புகழ் வாய்ந்தவையாகும். அரசு என்பது அரசனது தலைமையின்கீழ் இயங்குவதாகும். அரசின் கடமை உள்நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது; வெளிநாட்டின் அச்சுறுத்தலிலிருந்து மக்களைக் காப்பதும், சில சமயங்களில் வேற்று அரசுகளின் மீது படை நடத்தி அச்சுறுத்துவதும், பொருளைக் கவர்வதுமாகும். எனவே, உள்நாட்டைக் காப்பதற்கு மக்களிடமிருந்து பொருள் பெறுவதும், முடிந்தால் வெளிநாட்டின் மீது படைநடத்திப் பொருள்சேர்ப்பதும் அரசின் வேலையாக அன்று இருந்துள்ளது.

அரசுக்கு அடுத்தநிலையில் பலம் வாய்ந்த அமைப்புக்கள் சமயம் சார்ந்த அமைப்புக்களாகும். இத்தகைய அமைப்புக்கள் மக்களிடத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தன. மக்கள் சமயம் சார்ந்தவர்களை விரும்பிப் போற்றினர். அரசு எப்படித் தன்னிச்சையாகச் செயல்பட்டதோ, அதுபோல் இச்சமயம் சார்ந்த மடங்களும் தங்கள் விருப்பப்படி செயல்பட்டன. சட்டமும், ஒழுங்கும், நீதியும் அரசுக்கும் மடங்களுக்கும் அடிப்படை யானவை. ஆனால் அவற்றைக் கடைப்பிடிக்கவேண்டிய அரசே கடைப்பிடிக்கத் தவறினால் சட்டமும், ஒழுங்கும், என்ன கதியடையும் என்பதை அறிஞர் அறிவர். நாடு கேட்பார் இல்லாமல் தவிக்கும்.

இத்தகைய அவலத்தில் தமிழ்நாடு அல்லல்பட்டு ஆற்றாது துன்புற்றது. இத்தகைய காலக்கட்டத்தில் திருநாவுக்கரசர் மக்க

ளுக்குற்ற துன்பத்தைத் தனக்குற்றதாக உணர்கிறார். அத்தகைய உணர்வின் வெளிப்பாடு அவர் பாக்களில் காணப்படுகிறது.

**திருநாவுக்கரசர் சமணம் சார்ந்தது :-**

திருநாவுக்கரசு வாழ்ந்த காலத்தில் சமண சமயம் செல்வாக்குப்பெற்று விளங்கியது. திருநாவுக்கரசரும் இளமையில் கல்வி, கேள்விகளில் விருப்புற்று சமண அறிஞர்களை நாடினார். அவர்களுடைய அறவுரைகளைக் கேட்டார்; சொற்பெருக்கை விரும்பினார். சமண ஒழுகலாறுகளைப் பின்பற்றினார். துறவு மேற்கொண்டார். சமண சாத்திரங்களைக் கற்றார்.

துறவிகள் என்பதாலேயே அவர்கள் பற்றற்ற தவ வாழ்க்கையுடையவர்கள் என நினைத்து அவர்களோடு நீண்ட வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்டார்; அவர்களுடன் நெருக்கமான உறவு மேற்கொண்டு நட்பைப் பெரிதாக நினைத்து உண்மைகாணும் உணர்ச்சியை இழந்தார். நன்மக்களோடு நல்ல நோக்கத்திற்காகப் பழகும் பழக்கம்தான் உண்மையான நட்பை ஏற்படுத்தும் என்பதை அறியா இளமைப்பருவம். அதனால் சமணர்தம் அறிவை மயக்கும் அலங்காரச்சொற்கள்; அவை ஒன்றிரண்டு அல்ல; பல்லுரைகள் கேட்டுப் பலகாலம் நீண்ட வாழ்க்கைப் பயணம் செய்தார்.

பறவைகளைப் பிடிப்பதற்குக் கண்ணி வைக்கும் புள்ளுவர்களிடம் பறவைகள் இரைக்குச் சென்று சிக்கும். அதுபோலக் கையெலாம் நெய் ஒழுக கழுத்துவரை நிமிர்ந்துண்ணும் அவர் தொடர்பினால் பொய்யெல்லாம் மெய்யாகக் காட்சியளித்தது. மின்மினிப் பூச்சியின் வெளிச்சமே நெருப்பு என நினைப்பதுபோலப் பொய்யும் மெய்யாகப்பட்டது. தவம் செய்யும் அறவோர் பெண்கள் தொடர்பு இல்லாத இடத்தில் தவத்துறை மாக்களுடன் இருத்தல் இயல்பு. அதற்கு மாறாக நெய்ச்சோற்றின் விருப்பத்தினால் உடம்புபருத்து "குவிமுலையார்தம் முன்னே நாணமின்றி உண்டி உகந்து அமணே நின்றார் சொற்கேட்டு மயங்கினார்".

இள மகளிர் பலரும் சூழ்ந்து நின்று துறவிமார்களின் தலையில் உள்ள மயிரை ஒவ்வொன்றாகப் பறிப்பார்கள். அப்படித் தலைமயிரைப் பறிக்கும்போது பெண்கள் துறவிகளை மெய்யுறத்தீண்ட நம் தெய்வமென்று இன்புறுவராம். இளமகளிர் தொடர்பு நெஞ்சத் திட்பத்தைக் கெடுத்து, நோன்பு ஆற்றலைச் சிதைக்கும். அதனால் தவத்தோர் பெண்கள் தொடர்பை நீக்க வேண்டும். ஆனால் இவர்களோ தலைபறிக்கச் சுகம் என்னும் குண்டர்களாவர். தவமென்றெண்ணி அவம் செய்யும் வல்லமணர் கூட்டம். இக்கூட்டத்தோடு தமக்கிருந்த உறவை நினைத்து வருந்துகிறார். உள்ளத்தை அவர்வழிச் செல்லவிட்டுப் பாவத்தைப் பெருகுவித்தேன் என நைந்து உருகுகின்றார். வெட்கப்பட வேண்டிய செயல்களுக்கு வெட்கப்படவில்லை என்பதை உணர்த்துகிறார்.

## அவமே தவமா?

தவம் செய்பவர்கள் மனம், மொழி, மெய் எனும் மும்மையாலும் தூய்மை உடையவர்களாக விளங்குதல் வேண்டும். அதற்குரிய ஐம்புலத்தூய்மையும் செயல்பாடும் வேண்டும். ஆனால் சமணத் துறவிகள் தூயநெஞ்சம் இல்லாத துன்னாகத்தவர்களாகவும், துர்ச்சனவர்களாகவும் விளங்கினர்; உடல் நாற்றம் போவதற்காகக் கடுக்காய் உண்டனர். அதனால் மனத்திலுறும் காம உணர்ச்சி நீங்காது என்பது தெரியாதவர்கள். தவத்தின் பெருமை உணர்ந்தும் காமத்தின் இழிவு உணர்ந்தும் மனம் திருந்திக் காமத்தை விடவேண்டும். உள்ளத்தில் காம விருப்பம் இருந்தால் உடலில் காம விகாரம் தோன்றும். அதை மறைக்கச் சமணத் துறவிகள் முயன்றிருக்கிறார்கள். அழகிய பெண்கள் கையிலிடும் சோற்றை உண்ணும் கோழைமார்கள் என அழைக்கப்படுகின்றனர். எதனைச் செய்யக்கூடாது என நியமிக்கப்பட்டுள்ளதோ அதனைக் கள்ளத்தனமாகச் செய்பவர்கள் கோழைகள் ஆவர். அத்தகை நடிப்பு சமணத்துறவிகளிடம் இருந்தது. மனத்தில் கோழைகள்; புறத்தில் துறவு வேடமுடைய இவர்கள் துறவிகள் அல்லர் என்பதை

உணர்கிறார். சமணத்துறவிகள் மனத்தில் சினம் நீங்கப் பெறாதவர்கள்; காம நீக்கமும் அற்றவர்கள்; இவற்றை நீக்கவேண்டிய வழிமுறைகளையும் தேர்ந்துகொள்ளாதவர்கள் என்பதைத் திருநாவுக்கரசர் தெரிந்து "சினம் திருத்தும் சிறுப்பெரியார் - குண்டர் - செதுமதியார் - தீவினையாளர்" என உணர்த்துகிறார்.

உலகில் மூன்றில் ஒரு பகுதியினர் திருமணம் ஆகாமலே வாழ்ந்து மறைகின்றனர். இவர்களில் எத்தனைபேர் துறவு நெறி நிற்பவர்கள்? பெரும்பாலும் சந்தர்ப்ப சூழ்நிலையினால் திருமணம் ஆகாமல் வாழ்ந்து போகிறார்கள். ஆண், பெண் உடல் உறவு மட்டும் துறவை முடிவுசெய்யும் அளவுகோல் ஆகாது. மனத்தில் தாம் இளமையுடையோம், அழகுடையோம் என்று அதை அனுபவிக்க வேண்டும் என்னும் ஆசை நீக்கம் பெறுதல் வேண்டும். இளமையையும், அழகையும் அனுபவிக்கவேண்டும் என்னும் ஆசைநீக்கமே துறவை அளப்பதற்குரிய கருவி எனலாம். மனம் இத்தகைய உணர்விலிருந்து விடுபடுவது யார்க்கும் அருமையாகும். இத்தகைய அரிய செயலைக் கடைப்பிடிப்பவர்கள் மிகவும் எச்சரிக்கையாக வாழவேண்டியுள்ளது. அத்தகைய வாழ்க்கைக் கோட்பாடுகள் புறக்கணிக்கப்பட்டு மனத்துறவின்றி தவம் என்று அவம் செய்யும் ஒரு பெருங்கூட்டம் தமிழகத்தில் தலைஎடுத்தது. அவர் தம் கூற்றை மெய் என்று நம்பி அவர்களுடன் பல நாளும் சொல்லிய பெருஞ்செலவு மேற்கொண்டார். தவநெறி அவம் நிறைந்திருப்பதை உணர்கின்றார். மனம் திருந்துகின்றார். தயாமூல தன் வழி காண்கின்றார்.

இவர்கள் இவ்வாறு குற்றம் உடையவர்கள் என்று எடுத்துரைத்தால் மட்டும் போதாது. எது உண்மை? எது பாதை? என்பதையும் மக்களுக்கு நெறிப்படுத்தவேண்டும்.

**மனமும், ஐம்புல அச்சமும் :-**

உள்ளத்தில் ஒளிபெறுவதற்கு இடையூறாக இருப்பவை மனமும், ஐம்புலன்களுமாகும். அவை இயல்பாக ஆசை

வயப்பட்டவையாகும். உலகியல் இச்சை வயப்பட்டவை. உலகம் பெரிது; அழகியது, கவர்ச்சி மிக்கது. ஆனால் துய்க்க நினைக்கும் மனிதன் மிகவும் சிறியவன். அவனுக்குரிய புலன்கள் கொண்டு ஆரத்துய்க்க முடிவதில்லை. புலன்கள் ஒய்வதில்லை. துன்புறுகின்றன. பிறரைத் துன்புறுத்துகின்றன. புலன் வயப்பட்ட உடம்பும், உயிரும் துன்புறுகிறது. இத்துன்பநீக்கம் இன்பப் பேற்றுக்கு வழிகாட்டுகிறது.

மனம் தான் வேண்டியதைத் துய்க்கத் தடைவரும்போது அழுக்காறு, அவா, வெகுளி, செற்றம், வஞ்சனை, ஆர்வம், குரோதம் முதலான மன அழுக்குகளில் அழுந்துகிறது. எண்ணியது முடிக்கமுடியாத மனம் புலம்புகிறது. அப்புலம்பல் பொய்யாகவும், புறங்கூறலாகவும், பொல்லாங்காகவும், தீச்சொல்லாகவும், பயனில சொல்லாகவும் வெளிப்படுகின்றது. மனம் தீநெறிப்பட்டபொழுது அதன் வழிச்செல்லும் புலன்கள் மயங்குகின்றன. மனத்தை மயக்குகின்றன. இத்தகைய ஐம்புல மயக்கம் துன்பத்தின் தொடக்கம், புலன் அடக்கம் துன்ப நீக்கமாகும். புலன்கள் இயல்பாக அடங்கவேண்டும். மனம் இயல்பு நிலையில் திருந்தி அடங்குதல் வேண்டும். அத்தகைய முயற்சியைத் திருநாவுக்கரசர் பல நிலைகளில் எடுத்துரைக்கிறார்.

**பயிர் வதங்கியது: பாழ்நிலத்தில் நீர்பாய்ந்தது:**

உழவன் நீர்இறைக்க ஏற்றம் அமைக்கிறான். உடம்பைக் காலாக ஊன்றுகின்றான். உள்ளம் என்னும் நீர்முகக்கும் தாழியைக் கட்டுகிறான். காலையும் தாழியையும் இணைத்து ஒரு மரத்தை ஏற்றமாக்குகிறான்; அந்த ஏற்றம் என்பது ஒடியாடித் தான்படும் துயரம். துயரப்பட்டுத் தான் அமைத்த ஏற்றத்திலிருந்து கோலை(களைக்கம்பு)ப் பிடித்துத் துன்பப்பட்டு நீர் இறைக்கிறான். அந்த நீர் பயிராகிய உயிருக்குப் பயன்படாது, உயிரை வதங்கவிட்டுப் பாழ்நிலத்தில் போய்ப்பாய்ந்தது. இவ்வாறு பாழ்நிலத்தில் பாய்வதற்குக் காரணம் ஐம்புலன்கள் மயக்கத்தில் அயர்ந்து மெய்ம்மை தெரியாத குற்றம் என்கிறார்.

## ஐம்புல வெப்பத்தில் வெந்து சாகும் உயிர்:

ஐந்து கள்வர்கள் ஒரு ஆமையைத் திருடினார்கள். அதைச் சுவைத்து உண்ண உலை வைத்தார்கள்; ஆமையை அதற்குள் போட்டார்கள்; தளைத்து வைத்து தழல் எரிமூட்டினார்கள். வெப்பம் சூடு பிடித்தது. நீர் வெதுவெதுப்பாக இருந்தது. அறியாமை மிக்க ஆமைக்கு ஒருவகை இன்பம்; திளைத்து நின்று கூத்தாடியது, கொஞ்ச நேரத்தில் ஆட்டம் ஒய்ந்தது. இளைப்பு வந்தது. என்செய்வேன் என்று திகைத்து நின்றது. அதுபோல ஐம்புலக் கள்வர்கள் செய்யும் விச்சைகள் பல; இன்பம் எனக் காட்டித் துன்பத்தில் உயிரை நோகடிப்பார்கள்.

இவ்வாறு ஐம்புலன்கள் மக்களை நீர்வழிச்செல்லும் புனைபோல இழுத்துச் செல்கின்றன. அத்தெப்பத்தை நாம் போகவேண்டிய திசையில் செலுத்தும் மன எழுச்சி நமக்கு வேண்டியுள்ளது. பொறிப்புலன்களைப் போக்கறுக்கும் பயிற்சி வேண்டும். உள்ளத்தை நெறிப்படுத்தும் நினைப்பு வேண்டும். இத்தகைய அறிப்புறும் குறிப்பினால் ஐம்புல ஆதிக்கத்திலிருந்து விடுபடும் முயற்சி துளிர்க்கும். பொறிகளை நெறிப்படுத்துவார் பெறும் பேறு என்ன? புலன் ஐந்தும் பொறிகலங்கிக் கிடப்பதைச் செல்லத் தொலைத்து ஒருவழிப்பட அறிவை நிறுத்தி யான் எனது என்னும் செருக்கினையும் மாயை கன்மம் என்னும் குற்றங்களையும் களைந்து திருவருளை நினைவார் பெறும் பயன் என்ன? சினம் நீக்கி யோகப்பேற்றினைத் துய்ப்பர்.

## குடும்பமும், துறவும்:

ஐம்புலன்களை நெறிப்படுத்திக் குடும்ப வாழ்க்கையையும் நடத்தலாம்; துறவு வாழ்க்கையையும் நடத்தலாம். ஆனால் இரண்டும் சமூக நோக்குடையதாக இருக்கவேண்டும். சமுதாய நியதிக்குத் தீங்கு விளைவிக்காமல் சமூக அமைப்புக்குன்றாமல் சிதையாமல் சமுதாயத்திற்குப் பாதுகாப்பாக அமையவேண்டும். யான், எனது என்னும் பற்றினால் குடும்ப வாழ்க்கையில் முறை தவறிய பொருளாசை குடும்பத்தையும் தன்னையும் சீரழித்து சமுதாயத்தையும் கெடுக்கிறது. சட்டம், ஒழுங்கு, நீதி, நியதி

என்று சொல்லப்படும் அனைத்து அறக்கூறுகளும், அரசியல் கூறுகளும் தனிமனித வளர்ச்சியையும், சமுதாயத்தையும் உள்ளடக்கியதாகும். ஒன்றுக்கு ஒன்று தீங்கிழைக்காமல் ஒன்றை ஒன்று பாதுகாத்துச் செல்லுதல் வேண்டும். அத்தகைய பாதுகாப்பைச் சட்டம் குடும்பத்திற்கும், தனிமனிதனுக்கும் வழங்குகின்றது. குடும்ப வாழ்க்கை நடத்தும் இல்லறத்தானும் தனித்து வாழும் துறவியும் ஐம்புல ஒழுக்க நெறியில் பெறும் பேறும் அதனை இழந்ததால் உண்டாகும் வெறுமையும் விரக்தியும் திருநாவுக்கரசரால் வலியுறுத்தப்படுகின்றன.

**ஒத்து ஒவ்வாத உறவு:**

குடும்ப வாழ்க்கையில் செல்வத்தைத் தேடுகின்றோம்; தனக்கு இன்பம் நல்க மடந்தை நல்லாள் ஒருத்தியைத் திருமணம் செய்கிறோம். செல்வத்தாலும் திருமணத்தாலும் ஒருவனுக்கு உறவு உண்டாகிறது. அந்தவுறவு வீட்டில் செல்வம் நிறைந்த காலத்தில் சிறந்து விளங்கும். மாடு தானது (செல்வம்) இல்லெனின் மானுடர்பாடுதான் செல்வார் இல்லை. குடும்ப வாழ்க்கையில் உடல் உறவு மீக்கூர்ந்தால் என்ன நேரும்? கேளுமின்! இளமைபோய் கேடுவந்து ஈளைநோய் வந்து இருமல் வந்து இன்னல் உறுத்தும். இந்த வாழ்க்கையின் இறுதியில் வெப்புநோயும் இடரும் வெறுமையும் விரக்தியும் துன்பமும் துயரும் எனும் சூழ்வினையில் அழுந்தித் துயர்உற வேண்டியுள்ளது. இவ்வாறு அல்லலும், அருநோயுமாக வாழ்க்கைத்துயரம் சொல்லிமுடியாது. அதனால் இல்வாழ்வானுக்கும் இல்வாழ்க்கையை நெறிப்படுத்த வேண்டிய இன்றியமையாமை உள்ளது. அவனுக்கும் புலனடக்கமும் மித மிஞ்சிய ஆசைகளைத் தவிர்த்தலும் அப்பர் பெருமானால் அறிவுறுத்தப்படுகிறது. குடும்பத்திற்குள் உள்ள உறவும், அதைத் தொடர்ந்து புறத்தே உள்ள உறவும் ஒத்து ஒவ்வாததாக மனிதனை நெருக்கடிக்குள்ளாக்குகிறது. "ஒத்து ஒவ்வாதது உறவு" என்பர் திருநாவுக்கரசர். ஒருவருக்கு ஒருவர் ஒத்துப்போக முடியாத உறவினர் கூட்டத்துக்குள் உறவுநிலைகளைச் சரிக்கட்டிச் செல்ல

வேண்டும். தன்னிலையைத் தக்கவைத்துக் கொள்வதற்காகத் தாம் மற்றவர்களிடம் சமாளிக்கும் ஒருவகை ஏற்பாடுதான் உறவுநிலைகள். ஒரு காலத்தில் தன்னோடு ஒத்துப்போகும் உறவினர் இன்னொரு நேரத்தில் காலத்தையும் இடத்தையும் பொறுத்துத் தனக்குள்ள உறவை விலக்கிக்கொள்வர்; பகைத்தும் செல்வர். அத்தகைய சூழலில் ஒத்துப்போகிறவர்களை வைத்துக்கொண்டு வாழ்க்கையைச் சரிசெய்துகொண்டு வாழ்க்கைச்சக்கரத்தைச் சுழற்றுவதற்குத் தான் செய்யும் முயற்சிதான் மக்களினத்தோடு தனக்குள்ள உறவு. இதனைச் சுவாமிகள் ஒத்து ஒவ்வாதது உறவு எனக் குறிப்பிடுகிறார். உணர்வினாலும் அறிவு நுட்பத்தாலும் தன்னோடு ஒத்துப்போகும் சிலரும் ஒவ்வாத சிலரும் இருப்பர். அவர்களைத் திருத்தமுடியாது. ஒத்துப்போக வேண்டியதுதான் வாழ்க்கை.

## குற்றம் கூடி குணம் பல கூடாதீர்:

திருநாவுக்கரசர் மானிட சமூகம் பிறர் குற்றம் பாராட்டித் திரியும் இயல்புடையது என்றும், பிறர் குணத்தைப் பாராட்டி உரைக்கும் பண்பற்றது என்றும் குறிப்பிடுகிறார்.

*இன்னாதம்மா இவ்வுலகம் இனிய காண்க அதன்*
*இயல்பு உணர்ந்தோரே.*

என்றார் பண்டை ஆசிரியரும். குற்றம் பாராட்டி ஒத்து ஒவ்வாத மானிடக் கூட்டத்தின் நடுவே பொருளவாவில் சிக்கி "மருளவா மனத்தனாகி இருளவா" அறுக்காது அருளின்றிக் கலங்கி ஒருவன் வெறுமையில் தவிக்கலாமா? விடுதலைக்கு வழி என்ன? பொருளாசையிலிருந்து விடுதலைபெறும் நாள் எப்போது?

## வெறுமையும். விரக்தியும்:

மக்கள், மணந்த தாரம், பேரப்பிள்ளைகள் என்று இவர்கள் மேல் கொண்ட பற்றினால் எத்தனை வகையான சிக்கலில் சிக்கித் தடுமாறுகிறது மனித வாழ்க்கை. நியதியின்றிச் சிக்கலில் அழுந்தி வாடும் மனித வாழ்க்கை வயது முதிர்ந்தாலும் குடும்ப வாழ்க்கையின் பிடிப்புத் தளரவில்லையே. இளமை

போய்விட்டதே என்ற ஏக்கம் வேறு. இளைஞனாக இருந்தால் தளையவிழ் கோதை நல்லார் தங்களோடு இன்பம் துய்த்து வாழலாம். இளமையும் போய்விட்டது. இளமை போனாலும் ஆசை போகவில்லை; இப்படி ஒரு இரண்டும்கெட்டான் வாழ்க்கை.

**புறங்கூறுதல்:**

"பேச்சோடு பேச்சுக்கெல்லாம் பிறர்தமைப் புறமே பேச" நாக்கூச்சப்படவில்லை; கொடுமை என்பது நல்லுணர்வை உள்ளத்திலிருந்து நீக்கி அறிவைக் கெடுத்து உயிரைத் துன்புறுத்தும். இதிலிருந்து விடுதலை வேண்டாமா? இவற்றையெல்லாம் அப்பர் சுவாமிகள் அழகுபடச் சிந்திக்கிறார். உண்மை தெரியாமல் அவதிப்பட்டுத் தவிக்கும் குடும்பச் சூழலின் வெறுமையிலிருந்து விடுபடவேண்டுமே. தலைவன் தலைநிமிர்ந்து பெருமிதமாக வாழும் வழியைக் காட்டுகின்றார்.

**பட்டி நாய் :**

"நாய்க்கென்ன வேலை? நிற்கத்தான் நேரமில்லை". என்று ஒரு பழமொழி. "பட்டி நாய்போல நின்று பற்ற தாம் பாவந்தன்னை ஈட்டினேன் களையமாட்டேன்" என்பார். நாய்போல ஓயாது ஓடி எய்த்து ஈட்டியது பற்றும் பாவமும்தான் தவம் என்று அவம் செய்ததுதான், பெற்றது ஒன்றுமில்லை. இத்தனைக்கும் காரணம் என்ன? மெய்ம்மையைக் கல்லாமையும், கற்றவர் தங்களோடு உறவு கொள்ளாமையுமாம். அதனால் நல்லுணர்வுக்கு வெகுதூரத்தில் இருக்கின்றான். புலன்களை வென்றவர் வளாகத்தில் சேர்ந்தறியாதவன் ஆகையால் செந்நெறிக்கும் சேய்மையில் தவிக்கின்றான்.

**சராசரி மனிதனைப் பற்றிய கவலை :**

இத்தகைய சராசரி மனிதனைப் பற்றிக் கவலைப்பட வேண்டாமா? இக்கடையனும் கடைத்தேற வேண்டாமா? இடைநிலையை எடுத்துரைக்கிறார். எடுத்துரைத்துச் சிந்திக்க வைக்கிறார். குலமும், குணமும் இல்லாத பொல்லாதவன்;

குறிக்கோள்களும் பொல்லாதவை; பிறரைத் துன்புறுத்துவனவேயன்றி இனியவையல்ல; நல்லவை நாடாது குற்றமே பெரிது நாடும் இயல்பினர். மெய்மை நாடும் எண்ணமில்லை. நல்லினத்தை நாடும் நற்பண்புகள் சிறிதுமில்லை. இப்படிப்பட்டவன் மனிதனா? விலங்கா? இரண்டுக்கும் இடைப்பட்டவன்; விலங்காய் இருந்தால் பேச்சினால் வரும் குற்றம் இல்லாது இருந்திருக்கலாம்; மனிதனாய் இருந்தால் பொற்புடைய பேசி மகிழ்ந்திருக்கலாம்; இருதன்மையும் இல்லாததால் விலங்குமல்ல; விலங்கல்லாது ஒழிந்ததுமல்ல என மானிட இனத்தின் கீழ்மையை நயம்படவுரைக்கின்றார். பிறரை வெறுப்படையச் செய்யும் நோக்கத்தோடுதான் பேசுவது என்று கங்கனம் கட்டிக்கொண்டவன் அல்லவா இவன்? வறுமை எனப்படுவது அறிவு இன்மையாகும். இவனும் அப்படித்தான் இருந்தாலும் பிறருக்குக் கொடுக்கமாட்டான்; கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை; இரப்பது என் பிறப்புரிமை என்று நினைப்பவன் இப்படி ஒரு பிறப்புப் பிறந்துவிட்டான் என்கிறார். ஆசைக்கொன்றும் குறைவில்லை; அனுபவிக்கத்தான் உடம்பில் பலம் இல்லை. உள்ளம்தான் மருகுகிறது. கொட்டாச்சியில் மூங்கில் குச்சியை சொருகி அகப்பைசெய்வார்கள். குச்சி கழன்ற பிறகு கொட்டாச்சி ஓட்டையில் எதுவும் தங்காது. அதுபோலத்தான் வாழ்க்கையின் முதுமையும் பயனற்றுக் கிடக்கிறது. இருப்பினும் ஆசைக்கோர் அளவில்லை. பாம்பின் வாய்த் தேரை போலப் பல பல நினைக்கின்றான். இத்தகைய வாழ்க்கை இன்னலிலிருந்து மீளும் வழி என்ன?

பாலனாய்க் கழிந்தநாளும் பனிமலர்க்கோதையாருடன் குடும்பம் நடத்திக்கழிந்த நாட்களும் பின்பு மெலிவுடன் மூப்பு வந்த நாட்களிலும் வாழ்க்கைப் பயணம் ஒரே போக்கிலேயே போய்க்கொண்டிருக்கிறது. காலந்தோறும் கோலங்கள் மாறியதே தவிர வாழ்வுக்குப்பயன் யாது? குறிக்கோள் என்ன? என்பதை அறியும் அறிவு தோன்றவில்லை என்கிறார். என் செய்ய? மனம் என் வசமில்லையே. இளம் பெண்களின் பிடியிலிருந்து

விடுபடலாம் என்றால் என் மனம் பழகிய வாசனை மலத்தினால் போனபாதையிலேயே போகிறது. நிலத்தை உழுகின்ற உழவன் புதுச்சால் அடித்து நிலத்தை உழவேண்டாமா? இது சுவாமியின் கேள்வி. உழுத சாலிலேயே உழுதால் நிலம் பண்படுமா? உழவு ஆகுமா? வாழ்க்கை முழுவதும் சிறுவனாக இருந்தபோதும் இளைஞனாகித் திருமணம் செய்ததும் பின்பு முதுமை உற்றதுமாகிய வாழ்க்கைச்சுழற்சி என் வசம் அல்ல; அது இயற்கையின் வசம், என் மனம் படுத்தும்பாடு என்று நான் போன போக்கில் போக முடியுமா? திருந்த வேண்டாமா? திருத்தும் வலிமை அறிவுக்கு இல்லையா?

திருநாவுக்கரசர் தில்லைச் சிற்றம்பலம் செல்கிறார். கூத்தப் பெருமானின் திருக்காட்சி கிடைக்கிறது. ஆம் கூத்தப் பெருமான் போகவேடம், வேகவேடம் யோக வேடம் என்ற மூன்று வேடங்களின் ஒன்றிணைந்த திருக்கூத்தல்லவா தில்லையில் ஆடுகிறார்?

மக்கள் பெண்டுபிள்ளைகளுடன் மாடுகன்றுகளுடன் செல்வம் பெற்றுத் திளைக்க அவரே சோமாஸ்கந்தராகவும் கலியாண சுந்தரராகவும் மீனாட்சி சுந்தரராகவும் திருமணவேடம் புனைபவர் அல்லவா? மக்கள் திருமண வாழ்க்கையை இனிது நடத்த விழைந்த திருக்கோலமல்லவா போக வேடம். சிக்கல் இல்லாமல் சிரமம் இல்லாமல் தொல்லை துயரம் இல்லாமல் போகம் துய்க்க முடியுமா? இன்னல்கள் வந்துபோகும்; போராட்டங்கள் நடக்கும்; இறுதிவரை வலிமையோடு எதிர்கொண்டு இடுக்கண்களை இடுக்கண்படுத்த வேண்டியது அல்லவா வாழ்க்கை. அதற்காக அவர் எடுத்த வேடம் வேகவேடம். கயாசுரன் என்னும் யானையை உரித்துப் போர்த்திக் கொள்கிறார்; அந்த யானை என்ன? மும் மதவேழம் அல்லவா? காமம் வெகுளி மயக்கம் என்னும் மூன்று மலங்களும் மதங்கொண்டு யானை வடிவம் கொண்டு தாக்க அதை இறைவன் வென்றதல்லவா அந்த வேகவேடம். காலனை அடியவர்க்காகக் காலால் உதைத்ததல்லவா காலசங்கார வேக வேடம்; மும்மலக் கோட்டைகளையும் ஓரம்பினால் எய்ததல்லவா

வேகவேடம். ஆகவே வாழ்க்கையில் எத்தனை எதிரிகள்? அகப்பகையை வென்றல்லவா வாழ்க்கைப் பயணத்தை இனிது நடத்த முடியும். அதைக்காட்டுவது வேகவேடம். போகவேடமும் வேகவேடமும் மட்டுமா வாழ்க்கை இவை இரண்டுக்கும் முத்தாய்ப்பாக அமைவதல்லவா யோகவேடம். போகமும் வேகமும் காதலும் மோதலுமாக இருந்த வாழ்க்கை மாறி யோகவேடம் புனைகிறான் இறைவன். அதுவே தென்முகக்கடவுள் ஆலநீழல் கீழ் இருந்து மோன நிலையில் அறம்காட்டி ஆட்கொள்ளும் வேடம். இம்மூன்றும் ஒன்று கூடியது தில்லைக்கூத்தன் ஆடும் திருநடனம்.

அப்பர் தில்லைக்காட்சியைக் கண்டு இவ்வுண்மையை வியக்கிறார். போகமும் வேகமும் ஒடுங்குகிறது. யோகம் பிறக்கிறது. தில்லைக் கூத்தனைப் பார்த்து வியந்து திருத்தாண்டகம் பாடுகின்றார். இறைவன் அரிய துணைவன்; அடியார் அல்லல் தீர்ப்பவன்; பிறவிநோய்க்கு அருமருந்தாக இருப்பவன்; பிறந்தவர் மனைவி மக்களோடு போகம் துய்க்கச் செய்து மகிழ்விப்பவன். அகப்பகைவர்களாகிய ஐம்புலன்களை அடக்கும் அடியவர்களுக்கு உறுதுணைபுரிபவன் வேக வேடத்தனாகிய கூத்தனேயாவான். பின்னும் போகவேடங் களாகிய இல்லற இன்பங்களை மாற்றித் தனை நினைய வல்லாற்கு யோகசாதனையை அருள வல்லவன் தில்லைக் கூத்தப் பெருமான்.

**யோக நெறி:**

திருநாவுக்கரசர் உலகியல் ஆரவாரங்களை எடுத்துரைத்தார். அறியாமையும் அவலமும் நிறைந்த இந்த வாழ்க்கையின் விரக்தியைச் சுட்டிக்காட்டித் திருந்தும் நெறிகாட்டினார். சமூகத்தில் காணப்படும் மனக்குற்றம் சொற்குற்றம்; புலன்வழி ஏற்படும் குற்றங்களை எல்லாம் எடுத்துரைத்து வாழும் நெறியைச் சுட்டிக்காட்டினார். உலக வாழ்க்கையில் காதலும் மோதலும் நிறைவு தருவதில்லை; ஆடி ஓய்ந்த பின்பு தளர்ந்து விரக்தியுற்று வெறுமையில் தவிக்கும் உயிர் பல; அவை இருளில் அல்லல்

உறுபவை;. ஆனால் கூத்தன் அருளில் திளைக்கும் உயிர் போகமும் வேகமும் நீக்கி யோக நெறி தலைப்படும். யோகமும் வேகமும் தந்த அனுபவமுதிர்ச்சியினால் உயிர்கள் யோக நெறியில் உபாசனை செய்து வீடு பெறத் திருநாவுக்கரசர் வலியுறுத்துகிறார்.

**ஒளி ஒலி நெறி:**

திருநாவுக்கரசர் ஒளி,ஒலி ஆகிய இரு யோக நெறிகளையும் சுட்டிச் செல்கிறார். "மனத்துள்ளே கலமலக்கிட்டுத் திரியும் கணபதியென்னும் களிறும்"

"அரங்கிடை நூலறிவாளர் அறியப்படாததோர் கூத்தும்"
"ஒரு சுடராய் உலகு எழுமாயவன் கண்டாய்
ஓங்காரத்துட் பொருளாய் நின்றான் கண்டாய்"
"ஆறுமுகனோடு ஆனைமுகனுக்கு அப்பன் தன்னை"
"ஓங்காரத் தொருவன்காண் உயர்மெய்ஞ்ஞானம் விரித்தவன் காண்"
"ஊனைக்கழித்துய்யக் கொண்டருள் செய்வன உத்தமர்க்கு
ஞானச் சுடராய் நடுவே உதிப்பன"

என்று திருநாவுக்கரசர் திருவருள் காட்சியை ஒளி ஒலி வடிவாக உயர்ந்தோர் உள்ளக்கமலத்தில் காட்டுகின்றார். அத்தகைய முயற்சியை மேற்கொள்ள மக்களைத் தூண்டுகின்றார். அதற்குரிய பக்குவ நிலையை வலியுறுத்து கின்றார். போகமும் வேகமும் போதும். சிந்தையை நெறிப் படுத்தி யோகப்பயிற்சி செய்யுங்கள் என அறிவுறுத்துகின்றார். கண்ணுதலான் கருணையில் காட்டக்கண்டு இன்புற வேண்டிய திருவருள் பேற்றை யோக சாதனமாக உள்ள சாத்திரச்செய்திகளைத் தோத்திரப் பாடல்களில் திருநாவுக்கரசர் எடுத்துரைக்கின்றார்.

**உள் ஒளி:**

யோக நெறியை எடுத்துரைப்பவர்கள் சாதனையை இருவகையாகக் காட்டுவர்; அவை ஒளி நெறி; மற்றொன்று ஒலி நெறியாகும். சாதனை புரிபவர்கள் இவ்விரு நெறிகளில் ஒன்றைத் தேர்ந்து கொள்வார்கள். ஒளி நெறியைப்பின்

பற்றுபவர்கள் முருகக் கடவுளையும் ஒலி நெறியைப் பின்பற்றுபவர்கள் கணபதியையும் உபாசனை பண்ணுவார்கள். இவ்விரண்டு நெறிகளும் சிவனிடமிருந்து தோன்றுபவை என்பதனால் முருகனும் கணபதியும் சிவனது படைப்பாகப் போற்றப்படுகின்றனர். இரண்டும் சிவநெறியுள் அடக்கம். இரண்டு நெறிகளையும் சாதனை செய்து வீடு பெற்றவர்கள் சிவனடியார்களில் பலராவர். குறிப்பாக சுந்தரமூர்த்தி நாயனார் சேரமான்பெருமாள் நாயனார் போன்றவர்கள் ஒலி வடிவாகப் பரம்பொருளை அனுபவித்தவர் என்பதை அவர் நாள்தோறும் பூசையின் போது சிலம்பொலி கேட்டார் என்பதனால் அறியப்படும். திருஞான சம்பந்தர் மணிவாசகர் இருவரும் ஒளி நெறியைப் பின்பற்றினர் எனக் கூறுவர்.

**யோக நெறி:**

உடம்பு ஒரு நல்ல வீடு; அதில் குடிவாழ்பவன் உள்ளத்தை ஒரு அகல்விளக்காக்குகிறான். தூய உணர்வு என்னும் நெய்யை அந்த விளக்கில் ஊற்றுகிறான்.

உயிரே திரியாகிறது. மெய்ஞ்ஞானம் என்னும் தீயை ஏற்றுகின்றான். அந்த விளக்கில் பரம்பொருள் காட்சி தருகின்றான். முருகக்கடவுளின் தந்தையாகிய சிவனது திருவடியாகிய அருள் காட்சி கிடைக்கிறது. வீட்டில் விளக்கு இருளைப் போக்கிப் பொருளைக் காட்டும். அகவீட்டில் பரம்பொருள் இருப்பது அறியாமை ஆகிய இருளில் புலப்படுவதில்லை. மெய்யுணர்வு என்னும் ஒளியில் இருள் நீங்கிச் சிவ பரம்பொருளின் அருள் பிரகாசிக்கும். மனம் வெளிமுகமாகப் பொருள் உலகத்தில் சிக்கி இருப்பதால் புறக்கவர்ச்சியில் மயங்கிக்கிடக்கிறது. அகவீட்டில் விளக்கில்லை; அகத்தே விளக்கு ஏற்றப் பொறிபுலன்களை உள்முகமாகத் திருப்பும் போது மெய்யுணர்வு பிறக்கிறது. புலன் வயப்பட்ட கவர்ச்சி நீங்கி மனம் அடங்கும் போது அந்த மனமே நெய்யையும் திரியையும் தாங்கி நிற்கிறது. திரியில் மெய்யுணர்வாகிய நெருப்பை ஏற்றத் திருவருள் சித்திக்கிறது.

**அன்பு என்னும் நெய்யும் பாலும்:**

உடம்பு இறைவன் எழுந்தருளும் ஆலயம். தூய மனம் அடிமையாகும்; அடிமை இடைவிடாது ஆண்டையைப் பற்றி நிற்றல்போல மனம் இறைவனைப் பற்றிநிற்கிறது. கோயிலில் கடைப்பிடிக்க வேண்டிய ஆச்சாரம் வாய்மையாகும். "பொற்புடைய பேசக்கடவோம்; பேயர் பேசுவன பேசுதுமோ பிழையற்றோமே" என்பர்; சுவாமி. தீமை இல்லாத நன்மை பயக்கும் சொற்களை மென்மையாகப் பேசுதல் வேண்டும். புறங்கூறல், வீண் பேச்சு, பொய், பொல்லாங்கு, கடுஞ்சொற்களை மறந்தும் பேசுதல் கூடாது. அவ்வாறு பேசுதல் சிவபரம் பொருளைச் சிந்திக்கும் ஆச்சாரத்திற்கு இடையூறாகும். ஒருவனைத் தூய்மைப்படுத்துவது வாய்மையே ஆகும். அன்பன் எப்போதும் அன்பு என்னும் நெய்யும் பாலும் நைவேத்தியப் பொருளாகவும் அன்பு நீர் மொண்டு தீர்த்தமாட்டுதலும் வேண்டும். இத்தகைய அன்புடன் கலந்த பூசனையைச் செய்து கொண்டே நாட்களைச் செலவு செய்ய வேண்டும்.

கடிமனம் என்றதால் ஆர்வச் செற்றக்குரோதம் காமம் வெகுளிமயக்கம் முதலான குற்றங்களின் நீங்கிய மனம் என்பதாம். இக்குற்றம் நீங்கிய அடியவன் யாதொன்றும் தீமையிலாத சொற்களையே பேசும் நியமத்தனாக இருத்தல் வேண்டும். மறந்தும் புறங்கூறல், பொல்லாங்கு பேசுதல், பயனில சொல்பாராட்டுதல், தீச்சொல்பயில்தல், பொய் முதலான குற்றங்களைப் புரிதல் கூடாது என்பதனால் ஆசிரியர் வாய்மையைக் கடவுளுக்குரிய உபாசனையாக வலியுறுத்துகிறார்.

நேயம் என்பது இறைவனுக்கும் அன்பனுக்கும் இடையிலும் அவனால் படைக்கப்பட்டவுயிர்களிடத்திலும் அன்புடையவனாக விளங்குதல்; இத்தகைய அன்பு எல்லாவுயிர்களையும் தனக்கு ஒத்ததாகவும் உரிமை உடையதாகவும் மாற்றும் ஆற்றல் உடையதாகும். அதனால் ஒருவன் இறுதிக் காலத்திலேனும் வாய்மை அன்பு ஆகிய இரண்டின் சிறப்பையும் உணர்ந்து

போற்றுதல் வேண்டும். இத்தகைய பயிற்சி மனத்தைப் பக்குவப்படுத்தி இறைவனைத் தன்னுள் இருத்தும்.

**செம்பொருள் விளைச்சல்:**

திருநாவுக்கரசர் உழவர் குடியில் பிறந்தவர்; இயற்கை வாழ்வு வாழ்ந்தவர் என்பது அவர்தம் பாடல்களில் உழவு, ஏற்றம், உழுதசால், பயிர்தனைச் சுழிய விடுதல் போன்ற சொற்களைப் பயன்படுத்துவதிலிருந்து தெரியும். அவர்தம் முன்னோர்கள் நெற்பயிரை வளர்த்தார்கள்; இவரோ செம்பொருள் என்னும் சிவப் பயிரை வளர்த்துப் பிறரையும் பயிரிடுமாறு அறிவுறுத்துகிறார்.

மெய்மை என்னும் உழவுபோடுங்கள்; உழுத நிலத்தில் விருப்பம் என்னும் விதையை விதையுங்கள்; அப்பயிர் தளிர்க்கும் போது பொய்மை என்னும் களையை எடுப்பது பயிரை வளர்ப்பதாகும். களை பெருகினால் பயிர் வளராது; பலனும் இருக்காது. அதனால் பொய்ம்மையின் தீமையை உணர்ந்து திருந்துங்கள். வித்து முளைத்து வளர்ந்து பலன் தருவதற்கு எவ்வளவு காலம் காத்து இருக்கிறீர்கள்; அவ்வளவு காலம் பொறுமை என்னும் தண்ணீர் பாய்ச்சுங்கள். சோதனையும் வேதனையும் இடையூறுகளும் வந்துபோகும். அப்போதெல்லாம் சிவபரம்பொருளின் அருளில். நம்பிக்கை வைத்துப் பொறுமையைக் கடைப்பிடியுங்கள். தனக்குற்ற துன்பங்களுக்காகப் பிறவுயிர்களுக்குத் தீங்கு செய்யாமல் இருப்பது மிக முக்கியம். திருவருள் காட்சியை வியந்த வண்ணம் இருக்கவேண்டும். அத்தகைய வாழ்க்கையில் தற்தகைமை என்னும் வேலியிட்டு செம்பொருள் என்னும் பயிரைப் பாதுகாக்க வேண்டும், என்பர் திருநாவுக்கரசர்.

**காமம் தவிர்த்த கடவுள்:**

காமனைக் கண்ணால் எரித்தவன் இறைவன். நோய்க்கு முதல் காமம் என்பார் திருவள்ளுவர். அவன் யோக நிலையில் தவத்தில் ஆழ்ந்திருந்தான். அத்தவத்தைக் கலைக்க முயன்றான்

காமன். காமனது முயற்சியை அறிந்த இறைவன் அவனை எரித்தான் என்று புராணம் கூறும். காம உணர்ச்சி தவத்திற்குப் புறம்பானது. அருள் வாழ்க்கைக்குப் புறம்பானது. அதனால் அருள்வேண்டித் தவம் செய்வார் தவிர்க்க வேண்டிய குற்றம் பெண்ணின் போகம். மனம் அதனை நினையாமல் சிந்திக்காமல் விடுபடவேண்டும்; அதில் உறுதியாக இருக்கவேண்டும். மனமும் பொறி புலன்களும் பிற சூழ்நிலைகளில் காம உணர்வுக்கு இடம்தரும் புறத்தாக்குதலிலிருந்து விடுபடவேண்டும்.

மனம் அதனை வியந்து விரும்பும் அவா ஒழிந்து காம இச்சையிலிருந்து விடுபடவேண்டும்.

காமத்தின் சிறுமையை உணர்ந்து அதனால் தான் இழக்கும் அரும்பொருளை உணர்ந்து திருந்துதல் வேண்டும். மனம் முற்றிலும் காமத்தின் தாக்கத்திலிருந்து விடுபட வேண்டும். அத்தகைய தயார் நிலையே யோக சாதனத்திற்குப் பக்குவப்பட்ட நிலையாகும். இளமையும் குடும்ப வாழ்க்கையும் காதலும் மோதலும் நிறைந்த பருவம். வாழ்ந்து முடிந்த பழையவாழ்க்கை; இப்போது அதிலிருந்து விடுபட்டுப் புதிய உலகத்தைப் படைத்துக்கொண்டு அருள் உலகத்தில் இன்பம் துய்க்கத் தயாராக வேண்டிய சாதகன் காமத்தை மனம் மொழி மெய் புலன் ஆகிய அனைத்து நிலைகளிலும் விழிப்புடன் இருந்து தவிர்த்தல் வேண்டும். எப்போது வாய்ப்புக் கிடைக்குமோ அப்போதெல்லாம் மனத்தையும் பொறிபுலன்களையும் தீ நெறிப்படுத்தக்கூடியது காமம். அதனை உணர்ந்த சாதகனே இயல்புநிலையில் காமத்திலிருந்து விடுபட்டுத் திருவருள் பேற்றுக்குத் தயாராகின்றான்.

அத்தகைய மெய்யுணர்வாளன் நள்ளிரவு ஒழிந்த யாமங்களாகிய பகல் இரவுக் காலமனைத்திலும் திருவருளைச் சிந்தித்த வண்ணம் செய்யும் ஞானவேள்வியுள் ஞானத்தீ ஒளி விட்டுப் பிரகாசிக்கும். அத்தகைய நிலையில் எல்லையற்ற பரம்பொருள் அனுபவத்தால் உயிர் சுக நிலையை அனுபவிக்கும். இதனைத் தில்லைக் கூத்தனைக் கண்ட அப்பர்

"சுரும்பமருங்குழன்மடவார் கடைக்கண் நோக்கில் துளங்காத சிந்தையராய்த் துறந்தோர் உள்ளப் பெரும்பயன்" என இறைவனைக் காட்டுகின்றார்.

இறைவன் எடுத்த மூன்று வேடங்களும் மக்கள் வாழ்க்கையை விளக்க வந்த வேடங்களேயாகும். மூன்றும் ஒன்றிய திருக்கூத்தே தில்லையில் ஆடல்வல்லான் ஆகும். போகமும் வேகமும் நீங்கி யோக நெறியில் பரம்பொருளைத் தரிசிக்க இறுதிக் காலத்திலேனும் மக்கள் முயற்சிக்க வேண்டும் என்பதை,

"அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை அகல்ஞாலத்தகத்துள் தோன்றி
வருந்துணையுஞ்சுற்றமும் பற்றும் விட்டுவான்புலன்கள்
அகத்தடக்கி மடவாரோடும்
பொருந்தணைமேல் வரும்பயனைப்போக மாற்றிப்
பொது நீக்கித்தனைநினைய வல்லோர்க்கென்றும்
பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத
நாளெல்லாம் பிறவா நாளே" என வலியுறுத்துகின்றார்.

## இக்கட்டுரையிலிருந்து பெறும் செய்திகள்:

1. திருநாவுக்கரசர் வாழ்ந்த காலம் சமுதாயச் சீர்கேடுகள் நிறைந்த காலம்.
2. அச்சீர்கேடுகளைத் திருநாவுக்கரசர் எதிர்த்து நின்றார். அவர் சமூக சீர்திருத்தச் சிந்தனையாளர்.
3. ஒழுக்கக் கேட்டைச் சுட்டிக் காட்டி ஒழுக்கத்தை மக்களிடத்தில் வலியுறுத்தினார்.
4. சமணத்துறவிகளின் பலவீனங்களை எடுத்துரைத்தார்.
5. தவம் செய்வார் செய்யும் அவங்களை எடுத்துரைத்தார்.
6. மக்கள் அன்றாட வாழ்கையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களை வலியுறுத்தினார்.

7. அன்றாட வாழ்க்கையில் மக்கள் புரியும் குற்றங்களைக் கடிந்துரைத்தார்.

8. சிறு சிறு குற்றங்களாகத் தெரியும் அவையே மனிதப் பயிரை அழிக்கும் களைகள் என்பதை எடுத்துரைக்கிறார்.

9. தில்லைக் கூத்தன் போகவேகயோக வடிவம் தாங்கியிருப்பது உயிர்களின் வாழ்க்கைக்கதியாகும் என்பதை உணர்த்துவதாகும்.

10. யோக நெறிமுயற்சி உயிர்களைத் துன்ப நீக்கத்தற்கு அழைத்துச் செல்லும்.

11. எல்லா உயிர்களும் நெறியில் வாழப்பிறந்தன, என்பதால் திசை தவறிச் செல்வதைத் தடுக்க முயற்சி செய்கிறார்.

12. பிழைகளை நீக்கி உயிர்களைக் கரையேற்றுவதற்கே அவர்தம் பாக்கள் பாடப்பட்டுள்ளன.

13. பாக்கள் அனைத்தும் அவருடைய சொந்த அனுபவ வெளிப்பாடுகள்; கற்பனைகள் அல்ல.

14. சொந்த மண்ணில் நிகழ்ந்த செயல்களின் வெளிப்பாடுகள் பாடல் வடிவம் பெற்று உலகம் தழுவிய குறிக்கோள்களைப் பெற்றுள்ளதால் அவர்தம் பாக்கள் நிரந்தரமான பயன்பாடுள்ளனவாகும்.

**பயன்படுத்திய நூல்கள்:**

1. திருநாவுக்கரசர் அருளிய தேவாரத் தலமுறை, திருப்பனந்தாள் மடத்து வெளியீடு. 1957 அடிக்குறிப்புகளுக்கு இந்நூலே பயன்படுத்தப்பட்டுள்ளது.
2. திருநாவுக்கரசர் தேவாரம், தருமபுர ஆதீனவெளியீடு. ஆண்டு 1957.
3. நீதிக்களஞ்சியம், மூன்றாம் அச்சு, நவம்பர் 1989. பாவை பிரின்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-14.
4. புறநானூறு, ராசம் பதிப்பு.
5. மீ . ப . சோமு . சித்தர் இலக்கியம், அண்ணாமலை பல்கலைக்கழகம்.
6. Shakespeare Poet and Citizen, Victor Kiernan First Published by Verso 1993 London.
7. திருக்குறள்
8. சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை.
9. ஆடல் வல்லான், மகாவித்துவான் ச. தண்டபாணிதேசிகர். திருவாடுதுறை ஆதீன வெளியீடு.
10. டாக்டர். சி. மீனாட்சி, பல்லவர் வரலாறு.

தே.என்பது திருநாவுக்கரசர் தேவாரம் தலமுறை திருப்பனந்தாள் மடத்து வெளியீடு 1957.

# திருக்குறளாராய்ச்சி

*அரசஞ்சண்முகனார்*

முன் இதழ்த்தொடர்ச்சி

பின்னர் எழுத்தென்று காரணப்பெயர் கூறியாங்கு முன்னருமகரவெழுத் தென்றாவது அகரவுயிர் என்றாவது கூறாமல், அகரமென்று கூறினமையானும், பொருளடை உவமைக்குங்கோடல் இலக்கணமாகலாலும், பின்னர் அகரவுயிரு மடங்குமாறு எழுத்தெல்லாமென விதந்து கூறினமையானும் இவ்வகரம் எழுதப்படும். அகரவுயிரை யுணர்த்தாமல் எழுதப்படாத ஆதி அகரத்தை யுணர்த்திற்று. ஆதி அகரமென்று கொள்ளாது புறத்திசைக்கும் அகரவுயிர் எனக் கொண்டு அகரவுயிரொழிந்த பிறவுயிர்கள் அகரவுயிரை முதலாகவுடையனவென்றும் இப்பாட்டுத் தமிழாத லிற்றமிழெழுத்தே அகரத்தை முதலாகவுடையனவென்றும், அகரம் ஒலி வடிவிற்கேகாரணமாதலன்றி வரிவடிவற்குக் காரணமாகாதென்றும் பொருள்கொண்டு, மயங்காமற் புறத்திசைக்கும் அகரவெழுத்தும் தமிழெழுத்தேயன்றி வடவெழுத்து முதலாய பிறவெழுத்தும் வரிவடிவெழுத்துங் கோடற்பொருட்டு எழுத்து அகரமுதலவெனினும் அது பால்பகா அஃறிணைப் பெயராகலிற் பன்மையறியப்படுமாயின் அங்ஙனம் கூறாமல் எழுத்தெல்லாமென விதந்து கூறினார். எழுத்தெல்லா மென்றார்போல உலகமெல்லாமெனக் கூறின், உயர்ந்தோரும் உயிர்களும் இடமுமென அவற்றுளொன்றது பன்மையே யெஞ்சாதுணர்த்தலின் அங்ஙனம் கூறாமல் சேனையென்பது வீரரது பன்மையுணர்ந்தினுஞ் சொல்லால் ஒருமையாக நின்றாங்கு - உலகென்பதும் ஒருமையாக நின்று உயிரும் உயிரல் பொருளுமென விரண்டனது தொகுதியெல்லாவற்றையு முணர்த்துமியல் பிற்றாதலின் முதற்றெ‌ன ஒருமையாற் கூறினார். கடவுளது அளவில் பெயர்களுட் பிற கூறாது உலகந்தோன்றுதற்கு அவன் குணங்கள் பலவற்றுள்

ஈச்சுரத்தன்மை முதலாய ஆறுகுணங்களுமின்றியமையாக் காரணமாலின், அவற்றை யுணர்த்தற்பொருட்டு அக்குணங்கட்குப் பொதுப்பெயராகிய பகமென்னு முதனிலைபுணர்த்துப் பகவனெனக் கூறினார். ஆதிபகவனெனற்குத் தனக்கோராதியின்றி உலகிற்கு ஆதியாய் நின்று பகவனெனப் பொருள்கொள்க. நிலையுடைப் பொருளாகிய ஆதிபகவனும் நிலையில் பொருளாகிய உலகுமென இவ்விரண்டன்றிப் பொருள் பிறிதின்மையானும் இவ்விரண்டனுள் உலகிற்கு ஆதிபகவனெனவே பகவனுக்காதி பிறி தொன்றில்லை யென்பது தானே போதரல் காண்க. பதி பசு பாசமெனப் பொருள் மூன்றெனின் பசுபாசமிரண்டும் உலகெனப்படலின் அமையுமென்க. அகத்திசைக்கும் அகரம் மூவகை நிலையான் முத்திறப்படலின் ஆதி அகரமெனற்கு அம்மூன்றனுள்ளும் முதலாவதாகிய அகரமென்க. உவமைத்தன்மையைப் பொருளுக்கும் கோடல் வழக்காறாதலானும் ஆதி அகரம் அருவமாதலானும் அருவமாகிய ஆதிபகவனென்க.

எழுத்துக்களது தோற்றமுநிலையுமொடுக்கமுஞ் செவியானும், உலகினது தோற்றமுநிலையுமொடுக்கமும் ஐம்புலத்தானு முணரப்படலின் முதல முதற்று என்பனவற்றுள் குறிப்பு வினையை விரிப்புழி முதலாற்றோன்றி நின்றொடுங்குமென விரித்துக்கொள்க. இங்ஙனங் குறிப்புவினை மூன்றாவதுரு பானும் விரிதலை வலையான் முயன்றுண்பவன் வலையனெனப் பிரயோகவிவேகங் கூறலானுமுணர்க.

முதல முதற்றெனற்கு முதலான் முத்தொழிற்படுமெனச் சொல்லிலக்கணம் பற்றியுரைப்பினும் முத்தொழிற் படலான் முதலுடையவென்பதே கருத்தாகக் கொள்க. இங்ஙனம் இம்மலை தீயுடைமையாற் புகையுடைத்து எனினும், புகையுடைமையாற் றீயுடைத்தெனக் கருதப்படுதல் காண்க.

உலகு காரணமுடைத்தன்றென்பார்க்கு இனிவிவ்வேதுக்களாற் காரணமுடையயெனவும், காரணமுடைத்தாயினும் பகவன் காரணனாகானென்பார்க்கு இவ்விவ்வேதுக்களான் அவனே காரணமெனவுந் துணிதற்பொருட்டும், அவன் காரணனாயினும் அவற்குத் துணையாகப் பிறகாரணமும் வேண்டுமென்பார்க்கு இவ்விவ்வேதுக்களாற் பிற காரணங்கள் வேண்டா; பகவனே காரணமெனப் பிரித்தற்பொருட்டுங் கூறினாராகலின், முதற்றே என்பதன்கண் ஏகாரம் தேற்றமும் பிரிநிலையுமாமெனக் கொள்க.

இவ்வநுமானத்தில் உலகு பகவனாகிய காரணத்தையுடையதே என்பது மேற்கோள். குறிப்புவினையிறுதிநிலையால் விரிந்த முத்தொழிற்படலென்னும் வினை ஏது. யாது யாது முத்தொழிற்படலுடைத்து அஃது காரணமுடைத்து என்பது வியாத்திவாசகம். எழுத்துக்கள் தொழிற்படற் காரணத்தையுடைய வாயினாற்போல என்பது எடுத்துக்காட்டு. இங்ஙனம் மேற்கோளும் ஏதுவும் எடுத்துக் காட்டுங் கூறியுணர்த்தலின் இது பிறப்பொருட்டனுமானமாம். புகைத்தோற்றத்தால் அனலாகிய காரணமுண்மை யறியப்பட்டாற்போல உலகத்தோற்றத் தாற் பகவனுண்டென உணர்த்தலின் ஆதிபகவனென்னுங் காரணம் துணிபொருளெனப்படுஞ் சாத்தியமாம். உலகந்துணி பொருட்கிடமாகிய பக்கமாம். பக்கமாகிய உலகு சாத்தியமாகிய காரணத்தையுடைத்தென்பது மேற்கோள். சொல்வோன் கேட்போனென இருவரானுமறியப்பட்ட உலகு சொல்வோனால றியப்பட்டுக் கேட்போனால் அறியப்படாததாகிய காரணமுடைத் தென்னும் விசேடணம் பெற்றமையிற் பக்கமாயிற்று முன்னுணர்வின்றெனினும் ஏதுவாற் பின்னுணர்பொருளே சாத்தியமாதலின் ஈண்டு முதல் என்பது சாத்தியமாயிற்று.

எழுத்துக்கள் காரணத்தானன்றி இயங்காமை யாவரானு மறியப்படலின் அவை சபக்கமாம். திட்டாந்தத்தின் உறுப்பாகலின் யாது யாது முத்தொழிற் படலுடைத்து அது, அது காரணமுடைத் தென்பது வியாத்திவாசகம். இஃதுய்த்துணரப் படுமாகலின்

விதந்து கூறிற்றிலர். செய்யுளாதலின் போலவென்னு முருபு தொக்கது. துணிபொருளில்லாத நிலைக்களன் விபக்கமெனப் படுமாதலின் ஈண்டுத் தனக்கொரு காரணமில்லாத கடவுளொப்ப நியாயவை சேடிகர் முதலாயினார் தாம் நித்தமெனக் கொண்ட பொருளைக் காரணமில் பொருளென்றாராயினும் அஃதெல்லார்க்கு முடன்பாடன்மையில் விபக்கத்தை யுதாரணமாக்காது சபக்க திட்டாந்தங் கூறினார். இது சாதன்மிய திட்டாந்த மெனப்படும். குட முதலாய பிற கூறின், அவை அழிந்தபின் முன்னிருந்தபடி மீண்டுந் தோன்றலின்மையின் அவற்றையொழித்து இவ்வுலகு சங்காரகாலத்திற் காரணத்துளொடுங்கிச் சிருட்டி காலத்தில் முன்னிருந்தபடியே மீண்டுந் தோன்றலானும், அவ்வண்ணமே எழுத்துங் காரணத்துளொடுங்கி முன்னிருந்தபடியே மீண்டுந் தோன்றலானுஞ் சபக்கத்துள்ளு மெழுத்துக்களே கூறினார். விபக்கம் உதாரணமாகவரின் வைதன்மியதிட்டாந்தம்.

இம்மூன்றுறுப்பொடு உபநயநிகமனமென விரண்டு கூட்டி ஐந்துறுப்புக் கூறுவாருமுளர். அவையிரண்டும் எடுத்துக்காட்டு ளடங்கும். "ஒட்டிய உபயநிகமனமிரண்டுந் திட்டாந்தத்திலே சென்றடங்கு" மென்றார் கூலவாணிகன் சாத்தனாரும்.

அனுமான மூவகைப்படும், பூருவக்காட்சியனுமானமுங் கருதலனுமானமும் உரையனுமாமுமென. அவற்றுளிஃதுஉரையனு மானமாம். கடவுள் காட்சிப்பொருளுங் கருத்துப் பொருளுமாகாமல் உரையளவையாற் கொண்ட பொருளாகலின். இனிச் சொல்வோன் தான் கூறும் பக்கத்தினும் கேட்போன் பிறிதொரு பக்கத்தினுமுணர்ந்த பொருளே சாத்தியமாதல் பொருளாய்க் கேட்போரில் உரையளவை கொள்ளாதார்க்குணர் பொருள் ஆகாமையானும் பகவன் முதற்றே யுலகென்பது அப்பிரசித்த விசேடணம் என்னும் பக்கப்போலியாகுமெனிற் பகவனையுடைத் தென்னாது பகவனாகிய காரணத்தை யுடைத்தென்றாராகலிற் பகவனாகிய சாத்தியச்சிறப்புக்கான

காரணமாகிய சாத்தியப் பொதுமையை விசேடித்துநிற்றலானும் அக்காரணத்தான் யாவரானுங் காரியமுள்ள வழிக் கண்டபிரசித்த விசேடன மாகலானும் அங்ஙனமாகாதென்க. அற்றாயின் உலகு முதற்றென வேயமையுமெனின் உரையளவைக் கொண்டார்க்குக் கேள்வியாற் பகவனுணர்பொருளாதல் பற்றி, அவர் காரணமுடைத்தெனப் பொதுவகையாற் கொளலேயன்றி இக்காரணமுடைத்தெனச் சிறப்புவகையானுந் துணியுமாறு பகவன்முதற்றேயென்றார். அப்பிரசித்தம் அறியப்படாதது.

உலகமாகிய தொகுதி இன்ன காலத்துத்தோன்றிற்று இன்ன காலத்து அழிந்ததென்று ஒருவரானுங் காணப்படாது நிற்றலின் அஃது அழிவுபாடுடைய காரியமன்று. நிமித்தமே யெனக் கூறுஞ் சமயக்கணக்கருமுண்மையின் அவர்க்கு இவ்வேது அந்நியதராகதமென்னும் ஏதுப்போலியாகுமெனின், அவர் உலகத்தொகுதி காரியமாதலையுணர்த்தலாகலானும் அவை காரியமாயின் அவற்றை யுறுப்பாகவுடைய உலகும் காரியமாதல் சொல்லாதேயமையுமாகலானும் அக்குற்றமின்று. அந்நியதரன்- இருவரில் ஒருவன், அசித்தம் உள்ளதென்று கொள்ளப்படாதது. உலகுதானே தோன்றி யழியுமியல் பிற்றென்றும் அது நான்கு பூதங்களின் கூட்டமாகலின் அவையே தம்முளொன் றனையொன்று தோற்றி நிறுத்தி யழிக்குமென்றும் அதனாற் பிறிதொருகாரண முடைத் தெனலமையாதென்றுங் கூறுவாருமுண்மையின், அவர் கூறுங் கடாவையாசங்கித்துக் காரணமுடைத்தென்று மேற்கோளை வலியுறுத்தற்பொருட்டு முதற்றேயெனத்தேற்றங்கூறி எழுத்தக்களை யாவருங் காரியப்பொருளென்றே கோடலின் ஆண்டுமுதலென ஏகாரமின்றிக் கூறினார்

மாறுபட்ட இருதன்மை யொருபொருட்கண் இயல்பின வாகாமையானும் நீரிற் சூடுகாண்பின் அதனையியல்பெனக் கொள்ளாது செயற்கையெனவே கோடலானுந்தோற்றமும்

அழிவுந் தம்முள் ஒன்றற்கொன்று மாறுபாடுடையவாகலின் அவற்றுளொன்றையியற்கையெனக் கொள்ளினும் மற்றொன்றைச் செயற்கை காரணமின்றியின்மையானும் உலகு காரண முடைத்தெனல் பெறப்படுமெனவும் பூதங்கள் தம்முள் ஒன்றற்கொன்று காரணமெனின் அவை நான்குந் தோற்றமும் அழிவு முடையவாகலின் அவ்விரு தன்மையுமில்லாத பிறிதொன்றே காரணமாதலமையுமன்றி அவை தாமே யொன்றற்கொன்று காரணமாகாவெனவும் பிறவுங்கூறி மேற்கோளை வலியுறுத்துதற்பொருட்டுத் தேற்றப்பொருளை விரித்துக்கொள்க.

உலகத்தோற்றத்திற்குக் காலமுதலாய பிற காரணங் கூறுமாறு முண்மையின் அவர் கூறுங்கடாவை யாசங்கித்துச் சேதனமும் அசேதனமுமாகிய இவ்வுலகிற்கு அசேதனங்காரணமாதலமை யாதென்னு மேற்கோளை வலியுறுத்துதற்பொருட்டு, அவன் அவள் அது வென்று சுட்டுப்படாத கடவுளைப் பகவனென உயர்திணையாற் கூறினார். உலகம் பெரிதாகலின் அதனை யாக்கல் ஒருவராலமையாது; பலர்வேண்டுமென்பாரு முண்மையின் அதனை யாசங்கித்துக் கடவுட்கு அளவிலாற்ற லுண்மையினாற் சாலுமென்று மேற்கோளை வலியுறுத்தற் பொருட்டுப் பன்மை கூறாமல் உயர்திணையுளும் ஒருமையாற் கூறினார்.

கடவுள் சேதனமாயினும் மனமுதலிய கருவியொடு கூடியே அறியும் என்பாருண்மையின் அதனை யாசங்கித்து என்பும் நரம்பும் மூளையும் அறிவு மென்பன ஆண்பாற் கூறுந் தோலுந்தசையுமிரத்தமுமென்பன பெண்பாற் கூறுமாகலானும், பிருங்கி முனிவர்க்குப் பெண்பாற் கூறுநல்கிய வழியும் அறிவு குன்றாமையானும் ஆண்பாற்கூறின்றிப் பெண்மகளறிந்தாளெனல் காட்சியானுங் கருதலானுமேயன்றி யுரையானுமறியப் படாமையானும் பெண்பாற் கூற்றொடு கூடாவழியு

மாண்பாலறிதலும் ஆண்பாற்கூற்றொடு கூடினன்றிப் பெண்பாலறியாமையு முணரப்படலிற் கடவுளும் தான் உலகெலாமாகிய நிலையிலும் உலகுடனாகிய நிலையினும் அறிதல் போலவே உலகிற்கு வேறாகிய நிலையினுங் கருவியின்றித் தானேயறிதல் சுதந்திரத்தன்மையாலமையு மென்றுணர்த்தற்பொருட்டும்; கடவுள் விளையாட்டானே உலகத்தைத்தோற்றிக் காத்தழிக்குமென் பாருமுண்மையின் அதனையாசங்கித்து, விளையாட்டா னொருதொழிலை மேற்கோடல் பெண்மையறிவிற் கியல்பாகலன்றி யாண்மையறி விற்கியல் பன்மையின் உயிர்களது உள்ளிருணீக்கி யாளுந்தன்மை காரணமாக அத்தொழில்கள் நிகழுமன்றி விளையாட்டானா வனவல்ல வென்றுணர்த்தற் பொருட்டும் உயர்திணையொரு மையுள்ளும் பெண்பாலாற்கூறாது ஆண்பாலாற் கூறினார்.

முத்தொழில் விளையாட்டானிகழுமென நூல்கூறலுண்டே யெனின், அது கடவுளதாற்றலை நோக்கின் அத்தொழில்கள் அரியவல்ல எளியவேயென்னுங் கருத்தானன்றிப் பயனின்மைக்கருத்தானன்றென்க

இருடிகளுட் சிலருலகுபடைத்தாரென நூல் கூறலானுங் கடவுளருள் பெற்றாரும் ஆறுகுணம் படைத்தலின் அவரும் பகவனென்னும் பெயர்க்குரிமையெய்தலானும் அவருங் காரணமாதல் செல்லுமாகலின் அதனையாசங்கித்து, அவர் இயற்கையினன்றிக் கடவுளருள் பெற்றே அத்தன்மை யெய்தினமையானும் அவர் தோற்றத்திற்கும் கடவுளே காரணமாகலானும் அவர் காரணமாகார்; அவர்க்கும் ஆதியாகிய கடவுளே காரணமென மேற்கோளை வலியுறுத்தற்பொருட்டு ஆதியென்றார்.

உலகிற்குப் பகவன் காரணமென நான்கனுருபாற் கூறிற்பொருளினிது விளங்கும், அவ்வாறு கூறாது எழுவாயாற் கூறியதென்னையெனின், நான்கனுருபு அதற்குவினையுடைமை

முதலாகப் பல்பொருளுடைத்தாய் அவற்றுள் யாதானுமொன்றே யுணர்த்துமியல்பிற்றாகலின் அவ்வுருபு கடிசூத்திரத்திற்குப் பொன்னென்புழிப்போலத் தோற்றத்தைச் செய்யும் காரணமெனப்பட்டு அதற்குபகார மாகவேனும் பிணிக்கு மருந்து என்புழிப்போல அழித்தலைச் செய்யுங் காரணம்மெனப்பட்டு அதற்குப் பிறிதாகவேனும் பொருள்பயக்குமன்றி, ஆக்கல் காத்தல் அழித்தலென முத்தொழிலுஞ்செய்யுங் காரணப் பொருளென உணர்த்தா மையானும் முதற்றென்பது குறிப்புவினைப்பயனிலையாகலின் அதனை விரிப்புழிப் பகவனால் உலகு முத்தொழிற் படுமென்பது பெறப்படலானும் நான்கனுருபாற் கூறாமல் உலகு ஆதிபகவன் முதற்றே யென எழுவாயாற் கூறினார். இங்ஙனம் பக்கமாகிய உலகு எழுவாயாற் கூறப்படவே எழுத்துக்கள் சபக்கமாதலினவையுமெழுத்தெல்லா மகரமுதலவென எழுவாயாற் கூறலின்றியமையாதாயிற்று.

உலகைப்பகுத்துக்காண்புழி அப்பகுப்பிற்குப் பகவனாகிய காரணத்தோடு காலமுதலாய பிறவுங் காரணமாதல் பெறப்படலின் அக்கால முதலாய பிறவெல்லாம் உலகெனப்படும் பிண்டத்தின் ஏகதேசத்திற்கன்றி ஆதிபகவனொருவனே காரணமாகலானும் சேதனமும் அசேதனமுமென இருபாற்றாகிய உலகெனப் பகுப்புத்தோன்றக் கூறிற் பிறகாரணமுங் கூறாமை குன்றக் கூறலாக முடியுமாகலானும் பிண்டத்திற்காவது பகுப்பிற்குமாதல் சொல்லாதேயமையுமாகலானும் உலகெனப்பிண்டமே கூறினார்.

எழுத்துக்களைப்பகுத்துக்காண்புழிப் பல்லு மிதழும் முதலாயவும் பிறவும் காரணமாதல் பெறப்படலானும் பல்முதலாய பிறவெல்லாம் அப்பகுப்பைத்தொகுத்துக்காண்புழி யதனேகதேசத்திற்கன்றி முழுமைக்குங் காரணமாகாமையானும் உந்தி முதலாமுந்துவளிதோன்றி எழுத்தினைத்தொகுதிக்கும் பகுதிக்கும் காரணமாயினும் வரிவடிவாகிய எழுத்துக்களின் றொகுதிக்காவது ஏகதேசத்திற்காவது காரணமாகாமையானும்

வரிவடிவு, எழுத்தேயாகலானும் ஆதி அகரம் ஒலிவடிவாகிய எழுத்துக்களைத் தனிக் காண்புழியும் தொகுத்துக்காண்புழியும் காரணமாதல் போலவே அவ்வொலிவடிவைப்புறத்துய்ப்பதாகிய வளிக்கும் வரிவடிவிற்கும் காரணமாக நிற்றலானும் ஆசிரியர் தொல்காப்பியனார் தனித்தனிக் காரணங் கூறுங்கருத்தால் "எல்லாவெழுத்துஞ் சொல்லுங்காலைப் பிறப்பினாக்கம் வேறு வேறியல" வென்றாற்போல் ஈண்டும் எல்லாவெழுத்தும் அகரமுதலவெனக் கூறின்அவை பிண்டமாகாது தனித்தனிப்பகுக்கப்படும் பன்மையாகவே முடிதலிற் பிற காரணங்களுங் கூறாமை குன்றக் கூறலாக முடியுமாகலானும் எழுத்தெல்லாமெனிற் பிண்டமாகக் கொள்ளப்படுமாகலிற் பிண்டத்திற்காகிய காரணம் பகுப்பிற்கும் சொல்லா தேயமையுமாகலானும் எழுத்தெல்லாமெனப் பிண்டமே கூறினார். எல்லாவெழுத்து மெனிற் பன்மையாதலன்றிப் பிண்டமா காமையும் எழுத்தெல்லாமென்பது பன்மையாதலொடு தொல்காப்பிய முதலான நூல் வழக்கானு முணர்க.

நாதமாகிய ஓசையினின்று விசும்பும் விசும்பினின்று வளியும் உளவாதல் நூற்றுணிபாகலின் உந்திமுதலா முந்துவளிக்கும் ஆதி அகரமாகிய நாதங் காரணமாதல் காண்க.

நாதம் புறத்திசைப்பதன்றி உணர்வுமாத்திரையாண்னு மையானும் வரிவடிவின்கட் புறத்தொலியின்றெனினும் சித்திரமுதலாய வெழுத்துப்போல ஒலியுணர்த்தாமையும் நந்துழுதவிரேகை போலப் பொருளுணர்த்தாமையுமின்றி அவ்வரிவடிவாய எழுத்து ஒலிவடிவாய எழுத்தையும் பொருளையு முணர்த்தலின் அவ்வுணர்வு நாதமின்றி யுளதாகாமையானும் நாதத்தா லொலிவடிவும் ஒலிவடிவால் வரிவடிவுமுளதாதல் காண்க.

கடவுளது குணங்கள் அளவிலவாயினும் நூல் ஆறுகுணமெனவும் முக்குணமென எண்குணமெனவும்

வொவ்வோராற்றாற் கூறலின் அவற்றுட் பகமென்னும் முதனிலையால் அறுகுணமும் உரையனுமானத்தாலுண்மை கூறலின்,. உண்மையறிவு இன்பம் என்ற முக்குணத்துள் உண்மையும் பகவனென வுயர்திணையாற் கூறலான் அறிவும் இப்பாட்டாற் பெறப்பட்டன. அறுகுணங் கடவுளுக்கியற்கையும் அவனருள்பெற்றார்க்குச் செயற்கையுமாதல் ஆதியென்றதாற் பெறப்பட்டது. முக்குணமுயிர்க்குமுளவாயினுங் கடவுளதுண்மை யாண்டுமொரு தன்மைத்தாதலும் உயிரதுண்மை உடலொடு தோன்றி மறைதலுமென இவ்வேறுபாடும் இன்பமும் அதன் வேறுபாடும் எண்குணமும் வரும் பாட்டுக்களால் பெறப்படும்.

*காணப்பட்ட வுலகத்தாற் காணப்படாத* கடவுட்கு உண்மை கூறவேண்டு தலினெனப் பரிமேலழகருங் கூறினாராகலின் அப்பொருட்குக் குணஞ்செயல் முதலாயின கூறல்வேண்டுமன்றி எழுத்துக்கட்கு அகரம் தலைமையாயினாற்போல உலகத்திற்கு ஆதிபகவன் தலைவனெனல் கூடாது. என்னை? இவ்வுமையாற் றலைமையென்பதொன்றுண்டு என்பது பெறப்படுமன்றிக் கடவுளுண்மை பெறப்படாமையானுந் தலைமையுண்மையாற் பொருளுண்மையுஞ் சித்திக்குமெனி றேவர் இந்திரனாகிய தலைவனையுடையார் அதுபோலப் பறவைகளெல்லாம் முயற்கோடாகிய தலைமையையுடையவெனக் கூறின் அத்தலைமையால் முயற்கோடும் உண்டெனக் கோடல் வேண்டும். அவ்வாறின்மையானுமென்பது,

இனிப் பரிமேலழகர் வடவெழுத்திற்கும் முதலாதல் நோக்கியென்றமையான் அவர் புறத்திசைக்கும் அகரவுயிரெழுத்தைக் கருதினாரென்பது துணியப்படும். அங்ஙனமாயிற் காணப்பட்டவுலகிற்குக் காணப்படாத கடவுளைக் கூறியாங்கு எழுதப்பட்ட எழுத்திற்கு எழுதப்படாத பிறிதொன்று கூறாமை உவமவழுவாக முடிதலானும் எழுத்தெல்லாமெனவே அகரவெழுத்துமடங்கலின் அவற்றுளொன்றாகிய அகரவெழுத்து

ஆகாரமுதலிய பிறவெழுத்துக்கேயன்றித் தனக்குத்தானே தலைமையாதல் செல்லாமையானுந் தலைமை பிறவற்றிற்கேயன்றித் தனக்குத்தானே தலைமை யாதலின்மையானும் எழுத்தெல்லாமெனினும் அகரமொழிந்த எழுத்தெல்லாம் அகரமாகிய முதலையுடையனவென்பதே கருத்தெனின் ஆசிரியர் எழுத்தெல்லாவற்றுள்ளும் அகரந்தலைமையென ஏழனுருபினாற் கூறல்வேண்டும். அன்றெனினுந் தேவர்க்கு இந்திரன் தலைவனென்றாங்கு எழுத்தெல்லாவற்றுக்கும் அகரந்தலைமையென வேற்றுமை மயங்கலுமிலக்கணமாதலின் நான்கனுருபாற் கூறல்வேண்டும். அங்ஙனம் கூறாமையானும் அஃதுரையன்மை யறிக.

இனி முதல்லென்றற்குக் காரணமெனப் பொருளுரையாது தலைமையெனக் கொள்ளலும் பொருந்தாது. என்னை? ஆதியெனினும் முதலெனினும் தலைமையெனினும் ஒக்குமாகலின் பகவனாகிய முதலெனல் கூடுமன்றி ஆதிபகவனாகிய முதல் என்பது கூடாமையானும் பகவன் என்பது பலபொருள் உணர்த்தலின் அப்பொருள் ஆதியென் பதால் அமையுமெனிற் பகவன் என்னும் பெயர்ப் பொருள்களுக்குப் பகவன் ஆதியெனவே அவன் ஏனைப் பொருள்களுக்கும் ஆதியெனல் சொல்லாதே யமைதலானு மென்பது. ஆதியேகாரணமாகலொரு தலையின்மையின் ஆதிபகவனாகிய காரணமெனலமையுமென்க.

இனி உலகென்றது ஈண்டுயிர்கள் மேனின்றதென்றார். அதுவும் பொருந்தாது, என்னை? முதற்றேயுயிரெனினுந் தளைசிதையாமையானும் உயிர்கட்குப் பகவன் முதல் எனவே உயிரில் பொருளுக்குப் பகவன் முதலாகான், பிறிதொன்று முதலாதல் வேண்டுமெனவும் பொருள் பயத்தாலும் ஆசிரியர்க்கிது கருத்தாயின் எழுத்தெல்லாமென்றாற்போல உயிரெல்லாமென விதந்துகூறுவாராகலானுமென்பது.

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 341116